## கடுமையான மழை நேரத்தில்

# சாலையோரக் குழியில் விழுந்த மாணவன்




கோலாலம்பூர், அக். 17-
தலைநகர், ஜாலான் மஸ்ஜிட் இந்தியாவில் கடந்த ஆகஸ்ட் மாதம் இந்திய பிரஜை ஒருவர் பாதாள குழியில் விழுந்து காணாமல் போன சம்பவம் மக்கள் மனதில் இன்னும் ஆழமாகப் பதிந்திருக்கும் வேளையில்,

பக்கம் 13

## நடவடிக்கை எடுக்க மாநகர் மன்றத்திற்கு வலியுறுத்தல்

முதல் பக்கத் தொடர்ச்சி

# கடுமையான மழை நேரத்தில்...



அண்மையில் தலைநகர், ஜாலான் சன் பெங்கில் மாணவர் ஒருவர் சாலையோர பாதாள குழியில் விழுந்தச் சம்பவம் சமூக வலைத்தளத்தில் பரபரப்பை ஏற்படுத்தியது.

ஒரு வாரத்திற்கு முன்னதாக நிகழ்ந்துள்ள இச்சம்பவம் டிக் டோக் வாயிலாக பரவலாகியுள்ளது. சம்பந்தப்பட்ட இரு மாணவர்களும் சன் பெங் தேசிய வகை தமிழ்ப்பள்ளியைச் சேர்ந்தவர்கள். இருவரும் பள்ளி முடிந்து சாலையில் நடந்து செல்வதை அக்காணொளியில் காண முடிகிறது.

கடுமையான மழை நேரத்தில் அவ்விரு மாணவர்களும் கையில் குடையுடன் சென்றுக்கொண்டிருக்கையில், சன் பெங் ஆலயத்தின் எதிர்ப்புறம் தண்ணீர் தேங்கியிருக்கும் சாலையின் ஒரு பகுதியில் அவ்விரு மாணவர்களில் ஒருவரான தர்ஷ்வின் மாதவன் குழியில் விழுந்து விடுகிறார். அவரின் பக்கத்தில் மற்றொரு மாணவர் சாலையில் விழுகிறார்.

எனினும், தர்ஷ்வின் அதிர்ஷ்டவசமாக அக்குழியிலிருந்து எழுந்து விட, இருவரும் அங்கிருந்து அச்சத்துடன் செல்வதை காண முடிகிறது. அது ஒரு குறிப்பிட்ட அளவிற்கு பெரிய குழியாக இருந்தாலும், ஆழமாக இல்லாததால் அம்மாணவரால் எழுந்து வர முடிந்தது.

இந்நிலையில், கோலாலம்பூர் மாநகர் மன்றம் இது குறித்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என மலேசியத் தமிழ்ப்பள்ளி கல்வி மேம்பாட்டு, சமூக நல சங்கத்தின் தலைவர் எம்.வெற்றிவேலன் வலியுறுத்தியுள்ளார். அந்தக் குழி ஆழமாக இருந்திருந்தால் விபரீதம் நடந்திருக்க வாய்ப்புள்ளது. ஆகவே, மாநகர் மன்றம் விரைந்து செயல்பட வேண்டும் என அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

இது குறித்து டத்தோ பண்டார் டத்தோஸ்ரீ டாக்டர் மைமுனா சாயிட்டிற்கும் தாம் தகவல் தெரிவித்திருப்பதாக அவர் கூறியுள்ளார். பாதிக்கப்பட்ட 11 வயது சிறுவனான தர்ஷ்வின் அந்த கடுமையான மழை நேரத்தில் சாலையோரக் குழியில் விழுந்த சம்பவம் மீண்டும் மற்றவர்களுக்கு நிகழக்கூடாது என்பதையும் அவர் வலியுறுத்தியுள்ளார்.